அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
## (பழைய பாடத்திட்டம்)

## 25A - இந்திய வரலாறு

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020
## 25A - இந்திய வரலாறு (பழைய பாடத்திட்டம்)
## புள்ளி வழங்கும் திட்டம்

- I பகுதி - 01 x 40 = 40

II பகுதி

| | | |
|---|---|---|
| கட்டாய வினாவிற்கு | = | 18 |
| ஏனைய 03 வினாக்களிற்கு 14 வீதம் | = | 42 |
| II ஆம் பகுதிக்கு மொத்தப் புள்ளி | = | 60 |

Department of Examinations

இறுதிப்புள்ளி = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................... ✓ $\frac{4}{5}$
....................................................................
....................................................................

(ii) .................................................................... ✓ $\frac{3}{5}$
....................................................................
....................................................................

(iii) .................................................................... ✓ $\frac{3}{5}$
....................................................................
....................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

Department of Examinations

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉතිහාසය II (I කොටස)
வரலாறு II (பகுதி I)
History II (Part I)

25 A T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**இந்திய வரலாறு ஆதிகாலம் முதல் கி.பி 1206 வரை**

சுட்டெண்: ....................................

**அறிவுறுத்தல்கள்:**

* இப் பகுதி **40** வினாக்களைக் கொண்டுள்ளது. எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **ஐந்து** தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** மட்டுமே சரியானது. அந்தச் சரியான விடையைத் தெரிவுசெய்து, இங்கு தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையைக் குறிப்பிடுக.
* இப்பகுதிக்கு **40** புள்ளிகள் வழங்கப்படும்.
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதிய பின்னர் பகுதி **I** இன் விடைத்தாள்களை பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

Department of Examinations

## பகுதி I

* **1** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அந்தப் பெயரைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

**1.** (1) பாரததேசம் (2) ஹிந்துஸ்தான் (3) பாரதவர்ஷ
(4) ஹிமாச்சல் பிரதேசம் (5) ஜம்புதுவீபம் (.......)

**2.** (1) பரோடா (2) காட்ஸ் (3) கைபர்
(4) மக்ரான் (5) போலான் (.......)

**3.** (1) ரூபார் (2) பாருகச்ச (3) சங்குதாரோ
(4) மொஹஞ்சதாரோ (5) ரகிகார்கி (.......)

**4.** (1) அனு (2) புரு (3) யது
(4) துர்வாசு (5) பௌருவ (.......)

**5.** (1) வத்ஸ (2) லிச்சவி (3) மல்ல
(4) சாக்ய (5) கோலிய (.......)

**6.** (1) சக (2) இந்து - கிரேக்க (3) குஷாண
(4) பார்த்திய (5) வாகாடக (.......)

**7.** (1) சாராநாத் (2) கிர்நார் (3) நாசிக்
(4) மஸ்கி (5) ஷபாஷ்கர்ஹி (.......)

8. (1) அமராவதி (2) நாகர்ஜுன கொண்டா (3) கோர்ணாக்
(4) பாருத் (5) சாஞ்சி (.........)

9. (1) தெலுங்கு (2) கன்னடம் (3) மலையாளம்
(4) மராத்தி (5) தமிழ் (.........)

10. (1) நாலந்தா (2) ஜகத்தலா (3) அஸ்தினாபுர
(4) ஓதந்தபுரி (5) விக்கிரமசீலா (.........)

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் / கூற்றுகள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தாது** உள்ளன. **பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு அதன் **இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

11. (1) ஹியுங்சாங் - சீனன்
(2) தாராநாத் - வங்காளி
(3) அல்பிருணி - பாரசீகன்
(4) தொலமி - கிரேக்கன்
(5) பிளினி - உரோமன் (.........)

12. (1) அங்க - வஸ்ஸகார
(2) கந்தார - புக்குசாதி
(3) வத்ஸ - உதயன
(4) மகத - அஜாசத்த
(5) கோசல - பசேநதி (.........)

13. (1) குணால - மௌரிய
(2) பிம்பிசார - ஹரியங்க
(3) வீம கட்பியசீஸ் - குஷாண
(4) மினன்தர் - இந்து - கிரேக்க
(5) மாறவர்மன் - சாதவாகன (.........)

14. (1) இரண்டாம் புலிகேசி - அய்ஹோல் கல்வெட்டு
(2) உருத்திரதாமன் - ஜுனாகாட் கல்வெட்டு
(3) ஸ்கந்தகுப்த - பிற்றரி கல்வெட்டு
(4) கௌதமி புத்திர பாலஸ்ரீ - நிக்லிசாகர் கல்வெட்டு
(5) காரவேல - ஹதிகும்பா கல்வெட்டு (.........)

15. (1) புருஷபுர - பெஷாவர்
(2) சாகல - சியல்கொட்
(3) பிரயாக் - குஜராத்
(4) இந்திரபிரஸ்தம் - டில்லி
(5) சௌராஷ்டிரம் - கத்தியவார் (.........)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள்/ திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள்/கூற்றுகள்/ திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் **தரப்படவில்லை. Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது **கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் **இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக் குறியினுள்** எழுதுக.

16.

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | ராவி | A | அயோத்தி |
| (ii) | சரயு | B | வாரணாசி |
| (iii) | யமுனா | C | அமராவதி |
| (iv) | கங்கை | D | ஹரப்பா |
| (v) | கிருஷ்ணா | E | மதுரா |

(1) AEBCD (2) BCDEA (3) DAEBC (4) DEBCA (5) EBCDA (......)



Department of Examinations

| | X | | Y |
|---|---|---|---|
| 17. (i) | பாகதுக | A | அரசனின் ஆலோசகர் |
| (ii) | சேனானி | B | தேரோட்டுநர் |
| (iii) | புரோஹித | C | வரி சேகரிப்பவர் |
| (iv) | சங்ஹிரிஹித்ரி | D | பொக்கிஷதாரி |
| (v) | சூத | E | இராணுவத் தளபதி |

(1) BDCEA (2) CEADB (3) CEDBA (4) DCEAB (5) EABDC (......)

| | X | | Y |
|---|---|---|---|
| 18. (i) | சதுர் ஆஸ்ரமம் | A | சாம, தான, பேத, தண்டம் |
| (ii) | சதுர் வேதம் | B | பிராமணர், ஷத்திரிய, வைசிகர், சூத்திரர் |
| (iii) | சதுர் சத்யம் | C | பிரமச்சாரி, கிரகஷ்தர் வானப்பிரஸ்த சன்னியாசி |
| (iv) | சதர் வர்ணம் | D | இருக்கு, யசுர் சாமம் அதர்வம் |
| (v) | சதுர் உபாய மார்க்கம் | E | துக்க, சமுதாய, நிரோதா, மார்க்க |

(1) ABDCE (2) BCDEA (3) CADBE (4) CDEBA (5) DEBAC (......)

| | X | | Y |
|---|---|---|---|
| 19. (i) | ராஷ்டிர | A | குடும்பம் |
| (ii) | குல | B | புனித பானம் |
| (iii) | பூர் | C | நிர்வாக அலகு |
| (iv) | சோம | D | ஒரு நாணயம் |
| (v) | நிஷ்க | E | நகரம் |

(1) ADBCE (2) CAEBD (3) CDBAE (4) DBCAE (5) EABDC (......)

| | X | | Y |
|---|---|---|---|
| 20. (i) | அஜந்தா | A | பல்லவரதம் |
| (ii) | மதுரா | B | தாந்திரிக பௌத்த குகை |
| (iii) | புவனேஸ்வரம் | C | பௌத்த பிரதிமைகள் |
| (iv) | மகாபலிபுரம் | D | லிங்கராஜ ஆலயம் |
| (v) | அவுரங்கபாத் | E | பௌத்த சுவர் சித்திரங்கள் |

(1) ACBDE (2) ADEBC (3) CDEBA (4) EBCDA (5) ECDAB (......)

Department of Examinations

● **21** தொடக்கம் **25** வரையிலான வினாவிற்கான சரியான விடையைத் தெரிவுசெய்து **அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**21.** சாகர் இந்தியாவினுள் எந்தக் கணவாய் வழியாக பிரவேசித்தனர்.
(1) கைபர் கணவாய் (2) போலன் கணவாய் (3) மக்ரான் கணவாய்
(4) ஹேரத் கணவாய் (5) பரோடா கணவாய் (......)

**22.** விஷ்ணு ஷர்ம பண்டிதரால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் நீதி நூல் எது?
(1) ராஜதரங்கிணி (2) இராமாயணம் (3) திவ்யாவதானம்
(4) சாகுந்தலம் (5) பஞ்சதந்திரம் (......)

**23.** சாஞ்சி தூபி எந்த அரசனது ஆட்சியில் கட்டப்பட்டது?
(1) சந்திரகுப்த மௌரியன் (2) அசோகன் (3) புஷ்யமித்திர சுங்க
(4) கனிஷ்க (5) ஹர்ஷ வர்த்தன (......)

**24.** சீன யாத்திரை பிக்குவான ஹியுங் சாங் கல்வியைப் பெற்றுக் கொண்ட பௌத்த கல்வி நிறுவகம் எது?
(1) நாலந்த (2) வல்லபி (3) ஜகத்தல
(4) ஒதந்தபுரி (5) தக்சிலா (......)

**25.** கி.பி. 712 இல் சிந்து, பஞ்சாப் ஆகியவற்றை ஆக்கிரமித்த அராபிய இனத்தவன் யார்?
(1) குதுப் உத்தின் ஐபெக் (2) மாலிக் கபூர் (3) ஷிஹாப்-உத்தீன்
(4) கஜனி முகம்மது (5) மொஹமட் பின் குவாசிம் (......)

- **26** தொடக்கம் **30** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

**26. சிந்துவெளி மக்களின் சமூக வாழ்க்கை**

(1) இந்த நாகரிகத்துக்குரிய மக்கள் கல்கோலிதிக் சமூகத்துக்கு உரியவர்களென நம்பப்படுகிறது
(2) அவர்கள் கோதுமை, பார்லி, நெல் போன்ற தானியங்களைப் பயிரிட்டனர்.
(3) அவர்கள் எகிப்தியருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தனர்.
(4) இச் சமூகத்தில் வாழ்ந்த பெண்கள், மாலை, வளையல், மோதிரங்கள் போன்ற ஆபரணங்களைப் பயன்படுத்தினர்.
(5) அவர்கள் மரங்களை வழிபட்டனர்.

(......)

**27. பிற்பட்ட மௌரிய காலத்தில் இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம்**

(1) மேலை நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகளைப் பேணுவதற்கு முக்கிய துறைமுகமாக பாருகச்சா விளங்கியது
(2) உரோமப் பேரரசுடன் இந்தியர்கள் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.
(3) இக்காலப்பகுதியில் வர்த்தகர்கள் குழுக்களாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தனர்.
(4) வர்த்தகக் குழுக்கள் வங்கிகளாகவும் செயற்பட்டன.
(5) சமுத்திரகுப்த மன்னன் இந்திய வர்த்தகர்களுக்காக பாரசீகத்தில் வதிவிட நிலையம் ஒன்றைக் கட்டினான்.

(......)

**28. சாத்தவாகன அரச பரம்பரை**

(1) தக்கிணத்தில் ஒரு சாம்ராச்சியத்தை முதலில் தாபித்தவர்கள் சாத்தவாகனர் ஆவார்.
(2) சாத்தவாகன வம்சத்தை ஆரம்பித்தவர் சிமுக ஆவார்.
(3) சாத்தவாகனர் இந்து சமயத்திற்கு மட்டுமே ஆதரவு வழங்கினர்.
(4) சாத்தவாகனரின் தலைநகரம் பிரதிஸ்தான் ஆகும்.
(5) அவர்கள் கிருஷ்ணா-கோதாவரி நதிப்பள்ளத்தாக்குகளைச் சூழத் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தினர்.

(......)

**29. இரண்டாம் சந்திரகுப்தன்**

(1) இவன் ஸ்கந்தகுப்தவின் மகன் ஆவான்.
(2) குஜராத், சௌராஷ்டிரா, மால்வா ஆகியவற்றை அடிமைப்படுத்தி குப்த சாம்ராச்சியத்தை விரிவாக்கினான்.
(3) சீன யாத்திரிகனான பிக்கு பாஹியன் அவனது ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பல வருடங்கள் வாழ்ந்து வந்தார்.
(4) அவன் தனது மகளான பிரபாவதியை வாகடக இராச்சியத்தின் இரண்டாம் உருத்திரசேனனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.
(5) இவன் சிவபக்தன் ஆனாலும் பௌத்த, சமண சமயங்களுக்கும் இடமளித்தான்.

(......)

**30. பால இராச்சியம்**

(1) பால அரச வம்சத்தினை ஆரம்பித்தவர் பிரதேசத் தலைவரான கோபால என்பவர் ஆவார்.
(2) தர்மபால இராச்சியத்தை விரிவாக்கியதுடன் சில காலம் கனோஜையும் ஆட்சி செய்தார்.
(3) பால அரசர்கள் பௌத்த சமயத்திற்கு ஆதரவு வழங்கினர்.
(4) பால அரசனான தர்மபாலாவினால் நாலந்த பௌத்த ஆசிரமம் தாபிக்கப்பட்டது.
(5) நாலந்த செப்பேடு பால வம்ச அரசனால் வெளியிடப்பட்டது.

(......)

Department of Examinations

- **31** தொடக்கம் **35** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A)**, **(B)**, **(C)**, **(D)** என்னும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடையாகும். சரியான விடை/விடைகளைத் தெரிவுசெய்து.

**(A)** யும் **(B)** யும் மட்டும் சரியாயின் .................................... **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................................... **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மட்டும் சரியாயின் .................................... **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மட்டும் சரியாயின் .................................... **4** எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியெனில் .... **5** எனவும்
அடைப்புக் குறியினுள் எழுதுக.

| **அறிவுறுத்தல்களின் சுருக்கம்** | | | | |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| **(A)** யும் **(B)** யும் மட்டும் சரி | **(A)** யும் **(C)** யும் மட்டும் சரி | **(B)** யும் **(C)** யும் மட்டும் சரி. | **(C)** யும் **(D)** யும் மட்டும் சரி | வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் |

**31. இருக்கு வேத காலம்**

(A) குறூ, பஞ்சால என்பவை இக்காலத்தில் காணப்பட்ட பலம் வாய்ந்த கோத்திரங்கள் ஆகும்.
(B) இருக்கு வேத கால மக்கள் தென்னிந்தியாவிலும் குடியேறி இருந்தனர்.
(C) இக்காலப் பகுதியில் மக்கள் பல கோத்திரங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்.
(D) இயற்கையோடு தொடர்புடைய தெய்வங்களை அவர்கள் வணங்கினார்கள். (......)

**32. கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய குடியரசுகள்**

(A) இக் காலப்பகுதியில் 16 குடியரசுகள் நிலவின.
(B) அக் குடியரசுகள் கண, சங்க என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.
(C) அக் காலத்தில் நிலவிய முக்கிய இரண்டு குடியரசுகள் வஜ்ஜி, லிச்சவி என்பன ஆகும்.
(D) வட மேற்கு இந்தியாவில் நிலவிய ஒரேயொரு குடியரசு மல்ல ஆகும். (......)

**33. மெகஸ்தனிஸ்ஸும் இன்டிகாவும்**

(A) மெகஸ்தனிஸ்ஸின் இன்டிகா நூல் இந்தியாவின் அரசியல் முறைமை, புவியியல் நிலைமைகள், சமயம், சமூக நிலைமைகள் பற்றிய தகவல்களை வழங்கும் முக்கிய மூலாதாரமாகும்.
(B) இன்டிகா நூலின் மூலப்பிரதி கிடைக்காதிருந்த போதும் தற்போது அதன் பந்திகள் பிற்கால எழுத்தாளர்களின் மேற்கோள்கள் வடிவில் காணப்படுகின்றன.
(C) மௌரிய அரசசபையில் இருந்த மெகஸ்தனிஸ் மகா அலெக்சாந்தரினால் அனுப்பப்பட்ட தூதுவர் ஆவார்.
(D) பாண்டிய இராச்சியம் இந்துக் குருமார்களினால் நிர்வாகம் செய்யப்பட்டது என்று மெகஸ்தனிஸ் குறிப்பிட்டுள்ளார். (......)

**34. உருத்திரதாமன்**

(A) உருத்திரதாமன் உஜ்ஜையினியின் மகா சத்திரபன்
(B) அவனுடைய ஒரு கல்வெட்டில் சுதர்சனவாவியின் அணைக்கட்டு உடைந்தமை பற்றியும், பின்னர் அது புனரமைக்கப்பட்டமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(C) உருத்திராமன் உஜ்ஜையினியில் சக ஆட்சியின் ஆரம்ப ஆட்சியாளர் ஆவார்.
(D) கௌதமி புத்ர சாதகர்ணி அவனைப் போரில் தோற்கடிக்கக் கூடியதாக இருந்தது. (......)

**35. சாளுக்கியர்கள்**

(A) கி.பி. 6 ஆம் 12 ஆம் நூற்றாண்டுகளில் அவர்கள் தென் மற்றும் மத்திய இந்தியாவில் பரந்த பிரதேசத்தை ஆட்சிசெய்யக் கூடியதாயிருந்தது.
(B) ஆரம்பத்தில் சாளுக்கியர்கள் பதாமியிலிருந்து ஆட்சிசெய்தனர்.
(C) கீழைச் சாளுக்கியர் வெங்கியிலிருந்து ஆட்சிசெய்தனர்.
(D) மேலைச் சாளுக்கியர் தமது தலைநகராக கல்யாணியைத் தெரிவுசெய்தனர். (......)

Department of Examinations

**36** தொடக்கம் **40**வரையுள்ள வினாக்களில் **இரண்டு** கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தை அடைப்புக் குறியினுள்** எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **1** | சரியானது. | பிழையானது. |
| **2** | சரியானது. | சரியானது. |
| **3** | பிழையானது. | பிழையானது. |
| **4** | பிழையானது. | சரியானது. |
| **5** | சரியானது. | சரியானதும் முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| **36.** | சிந்துவெளி நாகரிகம் கி.மு நான்காம் நூற்றாண்டிலிருந்து நிலவியது. | சிந்துவெளி நாகரிகத்துக்குரிய கட்டிடங்களை கட்டுவதற்குச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. | (……) |
| **37.** | கௌரவ - பாண்டவர்களுக்கு இடையிலான போரை மகாபாரதம் விவரிக்கிறது. | இப்போர் குருஷேத்திரத்தில் இடம் பெற்றது. | (……) |
| **38.** | வர்தமான மகாவீரர் என்பவரே சமணர்களின் முதல் தீர்த்தங்கர் ஆவார். | மகாவீரர் கர்மா பற்றிய நம்பிக்கை இல்லாதவர். | (……) |
| **39.** | மகா அலெக்சாந்தர் மக்ரன் கணவாயூடாகத் தனது படையை இந்தியாவிற்கு வழி நடத்திச் சென்றான். | மகா அலெக்சாந்தர் போரஸ்ஸை தோற்கடித்தான். எனினும் அவனைத் தனது இராச்சியத்திற்கு உட்பட்ட ஆட்சியாளனாக வைத்திருந்தான். | (……) |
| **40.** | பல்வேறு பௌத்த மதப்பிரிவினரிடையேயான கருத்து வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கே மூன்றாம் பௌத்த பேரவை கூட்டப்பட்டது. | பேரவையின் இறுதியில் தேரவாதத்தை எதிர்த்த பிக்குமார் அந்த அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டனர். | (……) |

* *

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **25A**    විෂයය / பாடம்: **இந்திய வரலாறு**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 2 | 31. | 4 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 5 | 32. | 3 |
| 03. | 2 | 13. | 5 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 5 | 14. | 4 | 24. | 1 | 34. | 1 |
| 05. | 1 | 15. | 3 | 25. | 5 | 35. | 5 |
| 06. | 5 | 16. | 3 | 26. | 3 | 36. | 4 |
| 07. | 3 | 17. | 2 | 27. | 5 | 37. | 2 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 4 | 19. | 2 | 29. | 1 | 39. | 4 |
| 10. | 3 | 20. | 5 | 30. | 4 | 40. | 2 |

Department of Examinations

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 1 × 40 = 40

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

පැරණි නිර්දේශය/பழைய பாடத்திட்டம்/Old Syllabus

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25 A T II

இந்தியவரலாறு - ஆதிகாலம் முதல் 1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

✻ முதலாம் வினாவுக்கும் வேறு **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(**முதலாம்** வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** வழங்கப்பட்டுள்ளது.)

பகுதி II

Department of Examinations

1. உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு,** அவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சுருக்கமான வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

(i) மொஹஞ்சதாரோ (ii) ஆரவல்லி மலை

(iii) கைபர் கணவாய் (vi) பாருகச்ச

(v) சாஞ்சி (vi) பாடலி புத்திரம்

(vii) கனோஜ் (viii) காவேரி நதி

(சரியாகக் குறித்துப் பெயரிடப்பட்ட ஒவ்வொன்றுக்கும் 01 புள்ளி வீதமும், ஒவ்வொரு சுருக்கமான குறிப்புக்கும் 05 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.)

2. பின்வரும் தலைப்புகளின் கீழ் சிந்துவெளி நாகரிகம் பற்றி நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க

(i) நாகரிகத்தின் ஆரம்பம்

(ii) நாகரிகத்தின் அழிவும் வீழ்ச்சியும் (14 *புள்ளிகள்*)

3. இருக்கு வேத கால பகுதியின் சமூக, பொருளாதாரத்தின் முக்கிய பண்புகள் பற்றி விவரிக்குக. (14 *புள்ளிகள்*)

4. "சந்திரகுப்த மௌரியன் முதன்முறையாக இந்தியாவை ஒன்றிணைப்பதில் வெற்றியடைந்தான்."

(i) சந்திரகுப்த மௌரியனுக்கு முன்னர் மகதத்தை ஆட்சி செய்த அரச பரம்பரையின் பெயரினைக் குறிப்பிடுக. (01 *புள்ளி*)

(ii) சந்திரகுப்த மௌரியன் சிம்மாசனம் ஏறுவதற்கு முன்னர் இந்தியாவில் நிலவிய அரசியல் நிலைமை பற்றிச் சுருக்கமாக விவரிக்குக. (04 *புள்ளிகள்*)

(iii) சந்திரகுப்த மௌரியன் இந்தியாவை ஒன்றிணைத்த விதத்தினை தெளிவுபடுத்துக. (09 *புள்ளிகள்*)

**5.** "சமுத்திரகுப்தன் ஒரு படையெடுப்பாளன்"

(i) சமுத்திரகுப்தனின் சாதனைகள் பற்றிய தகவல்களை வழங்கும் முக்கிய மூலாதாரத்தின் பெயரினைத் தருக. (01 *புள்ளி*)

(ii) சமுத்திரகுப்தன் அரசனாகியபோது குப்த ஆதிக்கம் பரவியிருந்தமை பற்றிச் சுருக்கமான விளக்கம் தருக. (03 *புள்ளிகள்*)

(iii) சமுத்திரகுப்தனின் விரிவாக்கக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு அவனை எந்தளவுக்கு ஒரு படையெடுப்பாளனாகக் கருதமுடியுமென்பதைப் பரசீலிக்குக. (10 *புள்ளிகள்*)

**6.** "குப்தர் காலம் இந்திய கலாசாரத்தின் பொற்காலம்" ஆராய்க. (14 *புள்ளிகள்*)

**7.** ஹர்ஷவர்த்தனவின் இறப்பின் பின் வட இந்தியாவின் மேலாதிக்கத்துக்காக இடம்பெற்ற போராட்டங்களைப் பரிசீலிக்குக. (14 *புள்ளிகள்*)

**8.** தென்னிந்திய அரசியலில் சோழர்களின் பங்களிப்பினைப் பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடுக.

(i) பேரரசின் விரிவாக்கம்

(ii) மாகாண நிர்வாகம் (14 *புள்ளிகள்*)

**9.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டின்** வரலாற்றுச் சிறப்புப் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) சங்க இலக்கியங்கள்

(ii) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய இராச்சியங்கள்

(iii) ஹூணரின் படையெடுப்பு

(iv) ஹர்ஷவர்தன மன்னன்

(07 × 2 =14 *புள்ளிகள்*)

* * *

Department of Examinations

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

OLD


ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 25-A | T | ප්‍රධාන පරීක්ෂකවරුන්ගේ ප්‍රයෝජනය සඳහා පමණි. |
|---|---|---|---|

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. } 1

විභාග අංකය / சுட்டெண் / Index No. } ..............................




Department of Examinations

# இந்திய வரலாறு

## இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி.1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும், ஏனைய B,C பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக. (மொத்தம் நான்கு வினாக்கள்)

**(1) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தியப் புற உருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | | |
|---|---|---|---|
| (i) | மொஹஞ்சதாரோ | (ii) | ஆரவல்லி மலை |
| (iii) | கைபர் கணவாய் | (iv) | பாருகச்ச |
| (v) | சாஞ்சி | (vi) | பாடலி புத்திரம் |
| (vii) | கனோஜ் | (viii) | காவேரி நதி |

**(சரியாகக் குறித்துப் பெயரிட்டால் 1 புள்ளி வீதம் வழங்கல் வேண்டும்)**

Department of Examinations

**(2) பின்வரும் தலைப்புகளின் கீழ் சிந்துவெளி நாகரிகம் பற்றி நுணுக்கமாகப் பகுப்பாய்வு செய்க.**

i. **நாகரிகத்தின் ஆரம்பம்**

- ஆரம்பம் பற்றி தீர்மானிப்பதற்கான போதுமான காரணிகள் இல்லை.

- தற்போது இது தொடர்பில் இரண்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.
  1. உள்ளூர் மூலமாக ஆரம்பமாதல்
  2. வெளிநாட்டு மூலமாக ஆரம்பமாதல்

**உள்ளூர் மூலம்**

- இக்கருத்தை வெளியிட்டவர்களில் கிளீன் டானியல், ஏ. கோஷ் முக்கியமானவர்கள்.

- குஜராத், ராஜஸ்தான், குராத், பஞ்சாப், பலு சிஸ்தான், பிரதேசங்களில் செய்யப்பட்ட ஆய்வுகளின் படி எல்லா நிலப் பகுதிகளிலும் ஒத்த நிலைமைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றமை.

- இவற்றை விட வேறிடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலும் சிறப்பாக கவிகன்கத் சந்தன வாலா, தபர்கோட், சன்ஹுᵍதாரோ, லோதாத்ல் கொன்திஜ ஜடெய்ஜொதாரோ, அம்ரி, சுத்க ஜேன் தோர், ரொஜ்சி தேசவ்வார் ஆகிய நகரங்களில் மொஹஞ்சதாரோ ஹரப்பா நகர அமைப்பை ஒத்த அழிவுகள் மற்றும் ஹரப்பா காலத்துக்கு முன் நிலவிய நாகரிகத்துக்கு உரிய சிதைவுகள் காணப்பட்டன.

- கலிபன்கன் வீடொன்றில் இருந்த முற்பட்ட ஹரப்பாவுக்கும் ஹரப்பா யுகத்துக்கும் உரிய மட்பாண்டங்கள் கிடைத்துள்ளமை.

- இதற்கேற்ப முந்திய ஹரப்பா கிராமிய கலாசாரம் தொடர்ந்து அழிவுற அதன்மீது சிந்து சமவெளி நாகரிகம் ஆரம்பமானது என்பதாகும்.

**வெளிநாட்டு மூலம்**

- இக்கருத்தை வெளியிட்ட அறிஞர்கள் மோட்டிமர் வீலர், எலியற் ஸ்மித் பிரபு றெக்லன்.

**மோடிமர் வீலர்**

- மெசப்பொத்தோமிய நாகரிகத்திற்கும் சிந்து நாகரிகத்துக்கும் தொடர்பு உள்ளது.

- நகர நாகரிகம் பற்றிய அறிவுள்ள நாடோடி குலம் ஒன்று ஈரான் பீட பூமி வழியாக இந்து சமவெளிக்கு வந்திருந்ததினால் அங்கு நகர ஆரம்பத்திற்கு அடிப்படையானது எனப்படும்.

- மொசப்பத்தேமிய நாகரிகம் பரவிய பிரதேசங்களில் சிந்து சமவெளி முத்திரைகள் கண்டெடுக் கப்பட்டமை.

**எலியட் ஸ்மித்**

- எகிப்து நாகரிகத்தின் மீதெழுந்த நாகரிகம் என்பது

**பிரபு றெக்லன்**

- சுமேரிய நாகரிகத்தின் மீதெழுந்த நாகரிகம் என்பது......

Department of Examinations

### ii. நாகரிகத்தின் அழிவும் வீழ்ச்சியும்

- வீழ்ச்சி தொடர்பாகக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன.

- படிப்படியாக அழிவுற்றமை.
  மக்கள் தொகை அதிகரிப்புடன் வாழ்க்கை நிலைமை வீழ்ச்சியடைதல், நிர்வாகம் நலிவுற்றமை காரண-மாக நாகரிகம் படிப்படியாக அழிவுக்கு உட்பட்டது.

- வெள்ளப் பெருக்கினால் வீழ்ச்சியுற்றமை.
  - ஏ. வி. சர்மா, மோட்டிமர் வீலர், ஜோன் மார்ஷல் ஆகியோர் இக்கருத்தை கொண்டிருப்பவர்களில் அடங்குவர்.
  - சிந்து நதியில் அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நாகரிகம் நலிவுறும் போது அதனைத் தாக்குப் பிடிக்கும் சக்தி இல்லாமை.
  - சிந்து நதியின் இரு பக்கமும் பாரிய சுவர் கட்டப்பட்டிருந்தமைக்கான ஆதாரங்கள் உள்ளன.
  - மண் படைகளில் வண்டல் மண் படிந்ததின் காரணமாக ராவி நதியின் பயணவழி மாற்றமடைதலும் எப்பொழுதும் தொடர்ச்சியாக வெள்ளப்பெருக்கை எதிர்நோக்கியமை.

- தீடிரென ஏற்பட்ட தீயினால் நாகரிகம் அழிவுற்றமை.
  - கட்டட சிதைவுகளில் சில கட்டடங்களில் தீயினால் அழிந்தமைக்கான ஆதாரங்கள் காணப்பட்டமை.

- காலநிலை
  - பாரிய நாகரிகத்தில் மரங்களை அதிகளவில் பயன்படுத்தியமை. செங்கற்களைச் சுடுவதற்கான மரப் பலகைகளுக்காக காடுகள் அழிக்கப்பட்டமை. சூழல் சமநிலை மாற்றமடைதல், நதிகளின் நீரோட்டப் பாதைகள் மாற்றமடைதல் என்பவற்றால் காலநிலை மாற்றம் ஏற்படுதல்.

- தொற்று நோய்கள் பரவுதல்.
  - சூழல் மாற்றம் என்பன காரணமாகவும் வெள்ளப் பெருக்கு காரணமாகவும் நோய் பரவியதால் பிரதேசத்தை கைவிட்டுச் செல்ல முற்படுதல்.

- பகைவர்களின் ஆக்கிரமிப்பால் அழிவடைதல்
  - தாக்குதலில் மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர்களின் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டமை. வீடுகள் வீதிகள் உள்ளிட்ட பல இடங்களிலும் துண்டு துண்டாக வெட்டப்பட்ட எலும்புகள் காணப்பட்டமை.

**(14 புள்ளிகள்)**

Department of Examinations

**3) இருக்கு வேத கால பகுதியின் சமூக, பொருளாதார, கலாசாரத்தின் முக்கிய பண்புகள் பற்றி விவரிக்குக.**

**சமூக நிலைமை**

- இருக்கு வேதத்தில் தகவல்கள் காணப்படுகின்றமை.
- கோத்திரங்கள் கொண்ட சமூகம் (புரு, யது, துர்வாச அநு)
- தந்தை வழி சமூகம்
- பெருமளவு பழக்கவழக்கங்கள் பாதுகாக்கப்பட்டமை.
- விருந்தாளிகளை உபசரித்தல் உயர்ந்த பண்பு
- வீடுகள், மரம், மூங்கில் ஆகியவற்றால் கட்டப்பட்டு வைக்கோலினால் கூரை வேயப்பட்டிருந்தமை.
- வழிபாட்டு அறை, பெண்களுக்கான அறை, பொது காரியங்களுக்கான அறை என 3 பிரிவுகளுடனான வீடுகள்.
- ஒரு திருமண முறை
- திருமண கொண்டாட்டங்கள் மிகுந்த மதிப்புடையனவாக காணப்பட்டமை.
- ஆண் பிள்ளை பெறுதல் திருமணத்தின் முக்கிய நோக்கம்.
- பெண்களுக்கு சுதந்திரம் இருந்தமை.

- மனைவியும் கணவனுடன் பூசைகளில் பங்குபற்றியமை.
- கல்வி கற்ற பெண்கள் காணப்பட்டமை. (விஸ்வசாரா ஆபாலா கோஷா)
- வர்ணப்பாகுபாடு நிலவிய போதும் சமூகத்தில் இறுக்கம் இல்லாமை.
- ஆரியர் - ஆரியரல்லாதோர் வேறுபாடு நிலவியமை.
- ஆடைகளைப் பயன்படுத்தியமை.
- இக்காலத்தில் ஆடைகள் 4 பகுதிகளைக் கொண்டவை.
  1. நிவி - இடுப்பின் கீழ்ப்பகுதி ஆடை
  2. அதிவாசம் - தோளிலில் போடும் சால்வை
  3. தலைப்பாகை
  4. மேற்புற ஆடை
- ஆண்கள் தலையை மூடியிருந்தமை.
- ஆண் பெண் இருபாலாரும் ஆபரணங்கள் அணிந்தமை.
- பிரதான உணவு - தானியங்கள், இறைச்சி, மீன், பால், பாலுணவுப் பொருட்கள், பழங்கள்.
- மதுபான பாவனை காணப்பட்டதுடன் சோமபானம் அருந்தப்பட்டமை.
- விழாக்களில் ஆடல் பாடல் இடம்பெற்றமை.
- சமூக வாழ்க்கையின் மையமாக இருந்தது சபை ஆகும்.
- வாகனப் போக்குவரத்து, வேட்டையாடல், சதுரங்க விளையாட்டு பொழுது போக்குகள்
- பல்வேறுபட்ட இயற்கையை வழிபடுதல்.

Department of Examinations

**பொருளாதார நிலைமை**

- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கோலம் (பார்ளி, கோதுமை, வாற்கோதுமை, எள்ளு)
- விலங்கு வளர்ப்பு முக்கியமாக இருந்தமை. (ஆடு, மாடு, செம்மறியாடு, குதிரை)
- வர்த்தகம் நிலவியமை.
- கிராம மட்டத்தில், தரை மார்க்கம், நதி மார்க்கமாகவும் சென்று பொருட்கள் பண்டமாற்றுச் செய்யப் பட்டமை.

- மாடுகள் செல்வப் பொருளாதாரம் அளவிடும் கருவி.
- பசுக்கள் தூய்மையானதாகக் கருதப்பட்டமை.
- நீரைப் பெறுவதற்கு வாய்க்கால்கள் பயன்படுத்தியமை.
- பல்வேறு கைத்தொழில்கள் நிலவியமை. ( நெசவு, தச்சுக் கைத்தொழில், தோல் பதனிடுதல், தங்க ஆபரணம், உலோகப் பொருள்)

**கலாசாரம்**

- பல தெய்வ வழிபாட்டு எண்ணக்கரு
- இயற்கையை தெய்வங்களாக வழிபட்டமை. ஆகாயம், இடையுலகம் ஆகிய இடங்களில் எண்ணற்ற தெய்வங்கள் இருந்ததாக நம்பிக்கை.
- அத் தெய்வங்கள் - இந்திரன், வருணன், அக்கினி, சாவித்திரி, உஷை வாயு.
- எளிமையான யாக முறைகள் நிலவியமை.
- இரண்டு முக்கிய யாக முறைமைகள் - மனையாகம், மகாயாகம்

**(14 புள்ளிகள்)**

Department of Examinations

4) **"சந்திரகுப்த மௌரியன் முதன்முறையாக இந்தியாவை ஒன்றிணைப்பதில் வெற்றியடைந்தான்"**

(i) **சந்திரகுப்த மௌரியனுக்கு முன்னர் மகதத்தை ஆட்சி செய்த அரச பரம்பரையின் பெயரைக் குறிப்பிடுக.**

நந்த அரச வம்சாவளி **(01 புள்ளி)**

(ii) **சந்திரகுப்த மௌரியனைப் பின்தொடர்ந்த ஆட்சியாளர்கள் இருவரி.ன் பெயர்களைத் தருக.**

- பிந்துசாரன், அசோகன், பிருகத்ரத குணால, ஜலௌக, வீரசேன, தசரதன்

**(04 புள்ளி)**

(iii) **சந்திரகுப்த மௌரியன் இந்தியாவை ஒன்றிணைத்த விதத்தினை தெளிவுபடுத்துக.**

- கி.மு. 6 ஆம் நூற்றாண்டி.ல் ஹரியங்க வம்சாவழிக்கு உரிய சேனிய பிம்பிசார மன்னனின் கீழ் மகதத்தின் எழுச்சி ஆரம்பமாதல்.
- ஹரியங்க பரம்பரைக்குப் பின் மகத ஆட்சியாளர் சிசுநாக பரம்பரையினர்.

- சிசுநாதனும் அவனது வாரிசுகளும் நூறு வருடங்களாக மகதத்தை ஆட்சி புரிந்தமை.
- சிசுநாக வம்சத்தின் ஆதிக்கத்தை நந்த அரச வம்சம் பறித்துக் கொண்டமை.
- ஆதிக்கம் பெற்ற நந்த அரச வம்சத்தின் முதலாவது ஆட்சியாளன் மகாபத்ம நந்தன்.
- மகாபத்ம நந்தன் பௌத்த இலக்கியங்களில் உக்கசேனநந்தன் மகாபத்மநாதன் எனக் குறிப்பிடுகின்றான். பாஞ்சாலம், காய், ஹைஹய காலிங்க, அஸ்மக, குறூ, இக்சுவாக, தெமத்தர, சூரசேன விதிகோத்திர எனப்படும் பரம்பரையினை அடிமைப்படுத்தி மகதத்துக்கு இழுத்து வந்ததாக புராண இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- மகாபத்ம நந்தனின் கீழ் மகதத்தின் ஆதிக்கம விந்திய மலையிலிருந்து தென்புறமான பிரதேசங்கள் வரை பரந்திருந்ததாக தகவல்கள் உள்ளன. காரவேலனின் கதிகும்பா கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கலிங்கத்தில் நீர்பாசனக் கைத்தொழில் செய்வித்த மகத ஆட்சியாளன் மகாபத்மநந்தன் எனக் கருதப்படுகின்றது.
- கி.பி 327 இல் அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவை ஆக்கிரமிப்பு செய்த போது கிழக்கு இந்தியா நந்தர்களின் கீழ் பிரசித்தி பெற்ற பேரரசாக வளர்ச்சி பெற்றிருந்தது.
- அப்போது நந்த வம்சத்தின் இறுதி மன்னனான தனநந்தன் வலிமை மிக்க படைகளுடன் போர்க்கோலம் கொண்டதால் கிரேக்க ஆக்கிரமிப்பாளருக்கு நாட்டின் உட்பகுதிக்கு நுழைய முடியாதிருந்தது.
- தனநந்தனின் கீழ் வலிமை மிக்க படை இருந்ததாக கிரேக்க அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கேற்ப காலாட்படையினர் 20000 உம் யானைப்படை 3000 உம், அவரிடம் இருந்தது.
- தனநந்த மன்னன் மக்களிடம் நியாயமற்ற முறையில் அதிக வரி வசூலித்ததுடன் செல்வத்தைச் சேகரித்து வைத்துக் கொள்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றினான்.
- சந்திரகுப்த மௌரியன் மகதத்தின் ஆட்சியைக் கைப்பற்றியதுடன் நந்த வம்சத்தின் ஆதிக்கம் முடிவடைந்தது.

**(09 புள்ளிகள்)**

Department of Examinations

05) "சமுத்திர குப்தன் ஒரு படையெடுப்பாளன்"

(i) **சமுத்திரகுப்தனின் சாதனைகள் பற்றிய தகவல்களை வழங்கும் முக்கிய மூலாதாரத்தின் பெயரினைத் தருக.**

ஹறிசேன கவியினால் எழுதப்பட்ட அலஹாபாத் தூண் கல்வெட்டு

**(01 புள்ளி)**

(ii) **சமுத்திரகுப்தன் அரசனாகிய போது குப்த ஆதிக்கம் பரவியிருந்தமை பற்றிச் சுருக்கமான விளக்கம் தருக.**

- சமுத்திரகுப்தன் மன்னனாவதற்கு முன்னர் அரசனாக இருந்த குப்த ஆட்சியாளர்கள் ஸ்ரீ குப்த, கடோத்கச, குப்தன், 1 ஆம் சந்திர குப்தன்.

- குப்த இராச்சியத்தின் ஆரம்ப ஆட்சியாளன் வங்காளம் அல்லது மகத பிரதேச ஆட்சியாளராக இருந்ததாக புராண நூல்களிலும் குப்த கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

- 1 ஆம் சந்திரகுப்தன் குமாரதேவியை திருமணம் செய்து லிச்சவி பிரதேசத்தை இணைத்துக் கொண்டதால் அதிகார பிரதேசம் விரிவடைந்தமை.

- வின்சன்ட் ஸ்மித் இன்படி சந்திரகுப்தனுக்கு மகதத்திலும் அதைச் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் அ.திகாரம் நிலவியது என்றும் பாடலிபுத்திரம் இதுவரை லச்சவியின் உரிமை பெற்றிருந்ததால் அந்த நகரத்தையும் திருமணம் மூலம் சந்திரகுப்தன் உரித்தாக்கிக் கொண்டான் என குறிப்பிடப்படுகின்றமை.

- மகா இராஜாதிராஜன் என்ற புகழ்நாமத்தையும் 1 ஆம் சந்திர குப்தன் பெற்றிருந்தான். தங்க நாணயங்களை வெளியிட்டு அரசனின் அதிகாரம் நிலையானதென்பதை எடுத்துக் காட்டியமை.

- புராண நூல்களின்படி சாகேத (அவுத்) பிரயாக (அலஹபாத்) மகத என்பவற்றை அண்டிய பிரதேசங்களும் அவனுக்கு உரித்தாக இருந்தமை.

- பீகார், வடக்கு, வடமேற்கு வங்காளம் என்பனவும் சந்திரகுப்தனின் இராச்சியத்துக்கு உரித்தாக இருந்தது.

- மஜும்தார் கூற்றுப்படி சந்திரகுப்தன் நந்தர்களைத் துரத்திவிட்டு மகதத்தை விடுதலை பெறச் செய்தமை.

**(03 புள்ளிகள்)**

Department of Examinations

**(iii) சமுத்திரகுப்தனின் விரிவாக்கக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு அவனை எந்நளவுக்கு ஒரு படையெடுப்பாளனாக கருத முடியுமென்பதைப் பரிசீலிக்குக.**

- 1 ஆம் சந்திரகுப்தனுக்கும் லிச்சவி வம்ச குமார தேவிக்கும் மகனான சமுத்திரகுப்தன் பாடலிபுரத்தை தலைநகராகக் கொண்டு குப்த பேரரசை உருவாக்கியமை.

- சமுத்திரகுப்தனின் விரிவாக்கக் கொள்கையில் திக்விஜய கொள்கையைப் பின்பற்றுதல்.

- பேரரசு விரிவாக்கத்திற்கு அடிப்படையாக போர் செயல்முறை

- ஆர்யாவர்த்த மன்னர்களை வெற்றி கொள்ளல். இங்கு நாகசேனர், அச்சுதர், சந்திர வர்மர், உருத்ரதேவர், மடிலர், நாகதத்தர், நந்தன், பாலவர்மர் கணபதி நாதர் எனும் 9 மன்னர்களைத் தோற்கடித்து அந்த இராச்சியங்களை இணைத்துக் கொள்ளல்.

- அட்டவிக இராச்சியத்தை அடி பணிய வைத்தமை.
  மத்திய இந்தியாவில் விந்திய மலைத் தொடரை அண்மித்த பிரதேசங்களின் ஆட்சியாளர்களைத் தோற்கடித்து அவர்களைக் கீழ்ப்படிய வைத்தமை.

- தக்கிணாமத இராச்சியத்தை ஆக்கிரமித்தல்.
  தக்கிணபாத இராச்சியத்தைக் கைப்பற்றி அவற்றின் ஆட்சியாளர்களைர்களைக் கைப்பற்றியதுடன் அரசனின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு சிற்றரசர்களாக மீண்டும் அங்கு ஆட்சி நடத்தியமை. ( கோசலத்தின் மகேந்திரன், மகாகாந்தாரத்தின் வியாக்கிரராஜ், கௌராளையின் மந்திர ராசன், பிஷ்தாபுரத்தின் மகேந்திரகிரி, கோட்டுராவின் சுவாமி தத்தன், எறத்த பள்ளியின் தமண, காஞ்சியின் விஷ்ணுகோபன் அவமுக்தாவின் நீலராஜன், வேங்கியின் ஹஸ்திவர்மன், பாலக்காவின் உக்கிரசேனன், துவரஸ்திராவின் குபேரன், குஸ்தலபுரத்தின் தனஞ்சயன்)

- பிரத்தியன்ன அரசை அடிபணிய வைத்தமை. ( வங்காளத்தைச் சுற்றியுள்ள ) தவாக ( அஸாம் ) நேபாளம், காமரூப (மேல் அஸாம்) கதிபுர (ஜலந்தார்)

- கண இராச்சியம் கைப்பற்றப்பட்டமை.
  9 கண இராச்சியங்களைக் கைப்பற்றியமை. ( மாவைர், அர்ஜீனாயாணர்கள், யெவ்தேயர்கள், மாத்திரர்கள், அபிரர்கள், காக்கர்கள், கானிகர்கள், பரிகார்கள்)

- திக்விஜய இறுதியில் அஸ்வமேத யாகம் இரண்டினை நிகழ்த்தியமை சமுத்திர குப்தனின் பேரரசு விரிவாக்கம் யுத்த மயமான செயல் என்பதை விளக்குகிறது.

- பிரத்தியத்த இராச்சியம், கண இராச்சியம் என்பவற்றின் ஆட்சியாளர்கள் வரி செலுத்துதல், குப்த இராச்சிய கட்டளைகளைப் பின்பற்றுதல் பரிசுப் பொருட்கள் மற்றும் பல்வேறு பொருட்களுடன் மன்னனைச் வணங்கி மன்னனின் பிரகடனப்படுத்தல் மூலம் அரசனின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டமை.

- மூலாதாரங்களின் படி அரசன் போர் செய்து பரந்த பிரதேசத்தை கைப்பற்றியமை தெளிவாகிறது. வேறு தகவல்கள் சிறிதளவே.

**(10 புள்ளிகள்)**

Department of Examinations

**06) "குப்தர் காலம் இந்திய கலாசாரத்தின் பொற்காலம்" ஆராய்க.**

- கி.பி 4 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குப்தனினால் ஆரம்பிக்கப்பட்ட குப்தர் காலம் 1 ஆம் சந்திர குப்தன் சமுத்திர குப்தன், 2 ஆம் சந்திர குப்தன், 1 ஆம் குமார குப்தன் ஆகிய மன்னர்கள் அரசியல் ஆதிக்கத்தைக் கட்டியெழுப்பினர்.

- ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாகம் பொருளாதார வளம், இலக்கிய செயற்பாடுகளுக்கான அரச ஆதரவு பல்வேறு துறைகளிலும் உயர்கல்வி பெறுவதற்கான பின்னணி நிலவியமை, அறிஞர்களுக்கான ஆதரவு ஆகியவை இலக்கியம் கலாசாரம் என்பவற்றின் விருத்திக்கு அடிப்படையாய் அமைந்தன.

- சமஸ்கிருத மொழி இலக்கிய மொழியாக உச்ச அளவில் வளர்ச்சி பெற்றமை.

- சமஸ்கிருத இலக்கணம் முறையான நிலமை

- நாட்டியம், நாடகம் அலங்காரா, கணிதம் ( எண் கணிதம், கேத்திர கணிதம், தூய கணிதம், அட்சர கணிதம் ) விஞ்ஞானம், தருக்க சாஸ்திரம், மருத்துவம், சட்டம், வானியல், சமயம், தத்துவம் எனப் பல்வேறு துறைகளில் செய்யுள் உரை நூல்கள் எழுதப்பட்டமை.

- கற்றறிந்தோர் பலர் தோன்றியமை.

| | | |
|---|---|---|
| காளிதாசன் காவியம் | - | இரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம், இருது சங்காரம் |
| காளிதாசரின் நாடகம் | - | மாளவிகாக்னிமித்திர சாகுந்தலம் |
| விசாகதத்தரின் நாடகம் | - | முத்திரா ராக்ஷய, தேவி சந்திரகுப்த |
| பாரவிகே மகா காவியம் | - | கிராதார்ஸான, சிசுமாலவதம் |
| அமரசிங்கரின் | - | அமரகோஷ (சமஸ்கிருத மொழி அதிகாரி) |
| வராஹம்ஹிர | - | புருஹத் சங்ஹிதாவ |
| ஆர்யபட்டர் | - | சூரிய சித்தாந்தய, ஆரியபட்டிய சித்ததாந்தம் |
| விருகத்வாக்ப | - | அஷ்டங்ஹிருதய |

- அலஹபாத் மெய்க்கீர்த்தி, சமுத்திர குப்த மன்னனின் அரசமாளிகை கலைஞனான ஹறிசேனாவினால் ஆக்கப்பட்டது.

- தர்ம சாஸ்திர நூல்கள் எழுதப்பட்டமை. (காத்யாயனரின் தர்ம சூத்திர)

- குப்த அரச மாளிகையில் நவரத்தின கவிஞர் சேவை செய்தமை.

- சமய ரீதியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி, இந்துசமய மறுமலர்ச்சி ஏற்பட்டமை. வைதீக ( வேத ) நூல்களை அடிப்படையாகக் கொண்ட பிராமண சமயம் புதிய உருப்பெற்று தற்போதைய இந்து சமயமாக உருவெடுத்தமை.

- இக்காலத்தில் புதிய ஆக்கங்களுடன் பழைய நூல்களும் புதுவடிவம் பெற்றமை. மகாபாரதம் இராமாயணம் என்பன தற்காலத்தின் நிலமைக்கேற்ப தயாரிக்கப்பட்டன. மனுஸ்மிருதி புராண நூல்கள் என்பனவும் இவ்வாறு தயாரிக்கப்பட்டன. பஞ்ச தந்திரம் ஹிதோபதேசம் என்பன இக்காலத்துக்கு உரியனவே.

Department of Examinations

- இலக்கியம் போலவே கட்டிடக்கலை சிற்பக்கலை, செதுக்கல்கள், ஓவியம் போன்ற கலைகளும் விருத்தி பெற்றன.

**கட்டிட அமைப்புக்கலை**

- புத்தர் பெருமானுக்கும் தெய்வ விக்கிரங்களுக்கும் கட்டிடங்கள் கட்டப்படுதல்.
- செங்கற்கள் மட்டமாக்கப்பட்ட கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டமை.
- பல்வேறு வடிவங்களில் விகாரைகள், ஆலயங்கள் கட்டப்படுதல்.
  சாஞ்சி இல 17 விகாரை
  நச்சினா, குடாரஹி பார்வதி கோவில்
  பூடா, சிவன் கோவில்
  தியோ கார்கி தசாவதார கோவில்

**சிற்பங்கள் செதுக்கல்கள் கலைநுட்பம்**

Department of Examinations

- சிற்பக்கலை முழுமையாக வெளிநாட்டு முன்மாதிரியைக் கொண்டிருந்தமை.
- புத்தர் சிலைகள் எல்லா அம்சங்களும் நிறைந்தவை.
- சாரநாத்தில் போதிசத்துவ சிலை சிற்பக்கலையின் மிக உயர்ந்த ஆக்கமாகும்.
- விஷ்ணு, சிவன் போன்ற போன்ற இந்துசமய தெய்வச் சிலைகளும் உருவாக்கப்பட்டன.
- சிற்பங்களை உருாக்கும் முக்கிய நிலையங்களாக பாடலிபுத்திரம் சாரநாத் மதுரா என்பன விளங்கின.
- சிலைகளை உருவாக்க கருங்கல், சுட்ட மண் மட்டுமன்றி உலோகங்களையும் பயன்படுத்தினர். (நாலாந்தாவில் உள்ள உலோகத்திலான 25 மீற்றர் உயரமான புத்தர் சிலை, சுல்தான் கஞ்சி கம்பத்தில் உள்ள புத்தர் சிலை)

**செதுக்கல் கலை**

- உதயகிரி குகையில் உள்ள வராகவதார செதுக்கல்

**சித்திரக்கலை**

- இக்கலை உன்னத நிலை பெற்றிருந்தது.
- அஜந்தாவில் I. II, XVI, XIX குகைச் சித்திரங்கள்
- பாக் குகைச் சித்திரங்கள்
- பதாமி 3 ஆம் இலக்க குகையில் உள்ள சிவ பார்வதி காட்சி

- குப்தர் காலத்தில் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாக இந்திய கலாசாரத்தில் பொற்காலமாக குப்தர் காலம் இடம்பெற்றுள்ளது.

**(14 புள்ளிகள்)**

**7) ஹர்ஷவர்த்தனின் இறப்பின் பின் வட இந்தியாவின் மேலாதிக்கத்துக்காக இடம்பெற்ற போராட்டங்களைப் பரிசீலிக்குக.**

- ஹர்ஷவர்த்தனின் இறப்பின் பின் வட இந்தியாவின் ஆதிக்கத்தைப் பெற முக்கியமாக மூன்று அரச வம்சங்களுக்கிடையில் ஆதிக்கப் போட்டி ஏற்பட்டமை. (முக்கோண போராட்டங்கள்)

- மேற்கு இந்தியாவில் இராஜபுத்தானத்தின் கூர்ஜர பிரதிகாரர் மேற்கு வங்காளத்தின் பாலர், மேற்கு தக்கணத்தில் மகாராஷ்டிர இராஷ்டிர கூடர் ஆகிய மூன்று அரசுகளுக்கிடையிலான மோதல்.

- ஹர்ஷவர்தன ஆட்சிக்காலத்தில் வட இந்தியாவில் ஆதிக்க மத்திய நிலையமாக கனோஜ் இருந்தமையால் இந்த அரசுகள் கனோஜின் ஆதிக்கத்துக்காக போர் புரிந்தன. இது வட இந்திய அரசியல் அரசியல் ஆதிக்கக் குறியீடாக அமைந்திருந்தமை.

- இராஷ்டிரகூட ஆட்சியாளனான டிராவன் மன்னன் கூர்ஜர பிரதிகார அரசன் வத்ச ராஜனையும் அவன் படையையும் தோல்வியடையச் செய்து இராஜபுத்தானப் பாலைவனத்துக்கு துரத்தியமை.

- இராஷ்டிரகூட ஆட்சியாளனான டிராவன் வங்காளத்தை ஆக்கிரமித்து தர்மபால மன்னனைத் தோற்கடித்த போதும் டிராவனுக்கு உடனடியாக பின்வாங்க நேரிட்டமையால் கனோஜை கைப்பற்றிய தர்மபால பிரதிபாரயருக்கு கீழிருந்த மன்னனை நீக்கிவிட்டு தமக்குக் கீழ்படிவான சக்கிராயுதவை ஆட்சியாளன் ஆக்கியமை.

- குர்ஜர பிரதிஹார ஆட்சியாளன் இரண்டாம் நாகபட்ட ( வத்சராஜாவின் மகன் ) பிரதிஹார ஆதிக்கத்தை மீண்டும் தாபிக்க முயற்சி செய்யும் போது தர்மபால மன்னன் தோற்கடித்தமை.

- எனினும் இராஷ்டிர கூட அரசனான மூன்றாம் கோவிந்தன் வடக்கு பிரதேசத்தை ஆக்கிரமித்து நாகபட்டவை தோற்கடித்தான். எனினும் வெற்றியை உறுதிப்படுத்த முன்னர் கோவிந்த மன்னனுக்கு பின்வாங்க நேரிட்டமையால் அது தர்மபால மன்னனுக்கு சாதகமானது.

- தர்மபால மன்னனின் மகனான தேவபால வட இந்தியாவின் ஆதிக்கத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.

- குர்ஜர பிரதிகார ஆட்சியாளனான போஜ மன்னனும் போரிட்டு வட இந்தியாவின் பேரரசு ஆதிக்கத்தைக் கைப்பற்ற நடவடிக்கை எடுத்தமை.

- இறுதியில் இந்த 3 அரசுகளும் நலிவடைந்து அவர்களின் ஆதிக்கத்தை வேறு குழுக்கள் கைப் பற்றியமை.

**(14 புள்ளிகள்)**

Department of Examinations

**08) தென்னிந்திய அரசியலில் சோழர்களின் பங்களிப்பினைப் பின்வரும் தலைப்புகளில் ஆராய்க.**

(i) **பேரரசின் விரிவாக்கம்**

(ii) **மாகாண மற்றும் கிராமிய நிர்வாகம்**

(i) **பேரரசின் விரிவாக்கம்**

- கி.பி 9 ஆம் நூற்றாண்டில் பாண்டியரின் கீழிரு.ந்த தஞ்சாவூரை விஜயாலய சோழன் கைப்பற்றுதல் பேரரசுக்கான அடித்தளத்தை ஒழுங்கு செய்தல்.
- விஜயாலயனுடன் ஆரம்பித்து 1 ஆம் ஆதித்தியன், பராந்தகன், 1 ஆம் இராஜராஜன், 1 ஆம் இராஜேந்திரன் ஆகிய அரசர்களின் கீழ் ஆதிக்கம் விரிவடைதல்.
- விஜயாலயனின் மகன் 1 ஆம் ஆதித்தியன் தொண்டை மண்டல ஆதிக்கத்தை உரிமையாக்கி கொங்கு தேசம் மேற்கு கங்கையரின் தலைநகரமான தலகாட் நகரைக் கைப்பற்றி வலிமை மிக்க அரசாக ஆக்கியமை.
- பரந்தகனால் பாண்டியரின் ஆதிக்கம் வீழ்ச்சியடைதல், இராஷ்டிர கூடம் தோல்வியடைதல் மூலம் சோழ ராச்சியம் நிலைபெற்றதுடன் இராஷ்டிர கூட மன்னன் கனிஷ்கவுடனான தக்கோலம் போரில் சோழர் தோல்வியுற்று ஆதிக்க விரிவாக்கம் தற்காலிகமாக நிறுத்தப்படல்.
- பின்னர் சோழப் பேரரசு 1 ஆம் இராஜராஜனின் கீழ் எழுச்சி பெற்றமை.
- இராஜராஜனால் சோழரின் கப்பல் படை பலம் (காந்தலூர்) சேர கப்பல் படையை அழித்தமை.
- கேரளம் மற்றும் பாண்டிய ஆதிக்கத்தை அடக்கியமை.
- அனுராதபுரத்தை ஆக்கிரமித்து வடக்கு பிரதேசங்களை கைப்பற்றியமை. ( 5 ஆம் மிகுந்து உருகுணைக்கு ஓடியமை.)
- மேற்கு கங்கை நாட்டு ஆட்சிப் பிரதேசங்கள் மூன்றான கங்காவடிய, தங்கவாடிய கோலம்வாடிய வெற்றியடைதல்.
- சிம்மாசனத்துக்காக குழப்பம் நிலவிய கிழக்கு சாளுக்கிய தலைநகரைக் (வெங்கிர) கைப் பற்றி தமது ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சக்தி வர்மனை மன்னன் ஆக்கியமை.
- சக்திவர்மனின் சகோதரனான விமலாதித்தனுக்கு தமது மகளைத் ( குந்தவை ) திருமணம் செய்து வைத்தமை.
- கலிங்கத்தை வெற்றி கொள்ளுதல்.
- மாலைதீவுகளைக் (16 தீவுகள்) கைப்பற்றுதல்.
- இராஜராஜன் தென் இந்தியாவில் தோன்றிய முக்கிய அரசர்களுள் ஒருவன்.

Department of Examinations

- 1 ஆம் இராஜேந்திரனால் நடாத்தப்பட்ட போர்கள் அவன் பெற்ற வெற்றிகள் பற்றிய விவரங்கள் அவனுடைய திருவலாங்காடு செப்பேட்டிலும் திருமலை குன்றுக் கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

- துங்கபத்திரை நதியின் வடக்கே போர் நடாத்தி வங்காளத்தில் கங்கை நதி வரை வெற்றி பெற்றமை.

- மேற்கு சாளுக்கிய ஜயசிங்கவைத் தோற்கடித்தல்.

- பாண்டிய, கேரள பிரதேசங்களை அடிமைப்படுத்தி அரசனாக மகனை நியமித்தல்.

- கி.பி 1017 இல் இலங்கையை ஆக்கிரமித்து வடக்கு பிரதேச ஆதிக்கத்தைப் பெறுதல்.

- 5 ஆம் மிகுந்து மன்னனைக் கைதியாகக் கொண்டு சென்றமை.

- பொலன்னறுவையை நிர்வாக மையமாக்கி அதற்கு ஜனநாத மங்கலம் எனப் பெயரிட்டு அப்பிரதேசத்தை மும்முடிச் சோழ மண்டலம் எனும் பெயரால் குறிப்பிட்டு சோழ பிராந்தியமாக்கப்பட்டமை.

- தென்கிழக்கு ஆசியாவில் தாக்குதல் நடாத்தி முதன் முறையாக அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவை கீழ்படிய வைத்தமை.

- ஸ்ரீ விஜய அரசு மீது தாக்குதல் நடத்தி சைலேந்திர மன்னனைத் தோற்கடித்து கடாரம் கோட்டையைக் கைப்பற்றியமை. கடாரம் கொண்டான் என்ற விருதுப் பெயரையும் பெற்றிருந்தான்.

- இந்த ஆக்கிரமிப்பினோடு சுமாத்திரா, ஜாவா, மலாயாக் குடாநாடு, கீழ் பர்மா என்பவற்றை அடிமைப்படுத்தி சோழ ஆதிக்கத்தை தென்கிழக்கு ஆசியாவிலும் பரப்பியமை.

- நவீன கருத்தாவது தென் கிழக்கு ஆசியநாடுகளில் அரசியல் ஆதிக்கம் இல்லாது வர்த்தக ஆதிக்கமே பெற்றிருந்தமை என்பது.

- இதன் மூலம் இந்து சமுத்திரத்திலும் தென் கிழக்கு ஆசியாவிலும் வர்த்தக ஆதிக்கம் செலுத்துவதில் வெற்றி கண்டமை.

Department of Examinations

(ii) **மாகாண மற்றும் கிராமிய நிர்வாகம்**

- சோழரின் நிர்வாகம் மன்னனைச் சூழ்ந்த ஒருங்கமைப்புக் கொண்ட முடியரசு முறையாகும். நிர்வாகம் மத்திய ஆட்சி, பிரதேச ஆட்சி, கிராம ஆட்சி என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றமை.

**பிரதேச நிர்வாகம்**

- பிரதேச நிர்வாகத்தில் சோழப் பேரரசு மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தமை.

- இத்தகைய மண்டலங்களின் எண்ணிக்கை 6 ஆகவும் சில சமயங்களில் 8 ஆகவும் இருந்தமை. மிகப் பரந்ததாக இருந்தபோது 9 ஆக இருந்தமை. (பாண்டிய மண்டலம், சோழ மண்டலம், மலயநாடு மண்டலம், கொங்கு மண்டலம், மும்முடி சோழ மண்டலம்)
- சோழ மண்டலம் தவிர ஏனைய மண்டலங்களின் நிர்வாகம் நடாத்திய பிரதேச ஆட்சியாளராக பெரும்பாலும் இளவரசர்களும் அரச குடும்ப அங்கத்தவர்களும் காணப்பட்டமை.

- மண்டல ஆட்சியாளரிடம் படையணியும் இருந்தமை.
- மண்டலங்கள், ஊர், வளநாடு, நாடு, கூற்றம், மெலாகம் என பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை.
- கந்துர் எனப்படும் கன்குறம் நகர் ஆட்சி அலகுகளாக இருந்தமை.

**கிராம நிர்வாகம்**

- சோழர் நிர்வாகத்தில் மிக முக்கிய ஆட்சி அலகாக கிராமங்கள் இருந்தமை.
- கிராம நிர்வாகத்தின் போது "ஊர்" நாடு எனப் பெயர் பெற்ற இரண்டு நிறுவகங்கள் இருந்தமை.
- பல கூற்றங்கள் ஒன்றிணைக்கப்பட்டு நாடு உருவாக்கப்பட்டமை.
- உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டமை. கிராமம் 30 பிரிவுகளாக்கப்பட்டு அங்கு தகுதி வாய்ந்தவர்களிடையே தெரிவுச் சீட்டு மூலம் தெரிவு செய்யும் முறைக்கமைய தெரிவு செய்யப்பட்டமை.
- உத்தரமேரு கல்வெட்டில் கிராம நிர்வாகம் பற்றிய முக்கிய தகவல்கள் காணப்படுகின்றமை.
- ஊர் சபையில் வாரியம், சபை, தர்மசபை என்னும் செயல் குழுக்கள் இருந்தமை.
- ஊர் சபை வாரியம் எனப் பெயர் பெற்ற செயல்குழுவுக்கு பகிரப்பட்டு அதற்கு பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தமை.
- உத்தரமேரு கல்வெட்டில் 5 வாரியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தமை. ( வீட்டுத்தோட்டம் பற்றிய குழு நீர்பாசனம் பற்றிய குழு, வருடாந்த குழு, தங்க குழு, பஞ்சவார குழு)
- ஊர் சபை கிராமத்துக்கான பாரிய பொறுப்புக்களை நிறைவேற்ற கடமைப்பட்டிருந்தமை. (காணி பயிர் செய்தல், நீ வழங்கல், சுகாதார நடவடிக்கைகள், வீதிகள் அமைத்தல், கல்வி சமய நடவடிக்கைகள், வரி சேகரித்தல், வழக்குகளுக்கான தீர்ப்பு)
- கிராம சபைக்குரிய பொறுப்பையும் அதிகாரத்தையும் நடைமுறைப்படுத்தும் போது குழுக்களின் உதவிக்கு சம்பளம் பெறும் நிரந்தர உத்தியோகக் குழுவினர் இருந்தமை.
- கிராம சபை நிர்வாகம் வினைத்திறனுடன் செயற்பட்டமையால் அரசின் பலம் நலிவுற்ற போதும் கிராம சபை நிர்வாகம் நன்கு நிலவியமை விசேட அம்சமாகும்.

**(14 புள்ளிகள்)**

Department of Examinations

**09) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினது வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

(i) **சங்க இலக்கியங்கள்**

(ii) **கி.மு 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய இராச்சியங்கள்**

(iii) **ஹுணரின் படையெடுப்பு**

(iv) **ஹர்ஷவர்த்தன மன்னன்**

(i) **சங்க இலக்கியங்கள்**

- கி.பி 1 ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 3 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பாண்டிய மன்னர்களின் அனுசரணையுடன் ஒன்று கூடிய சங்கம் மூலம் எழுத.ப்பட்ட இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் எனப்படும்.

- மூன்று சங்கங்கள் இருந்தமை
  1 ஆம் சங்கம் தென்மதுரையில், 2 ஆம் சங்கம் கபாடபுரத்தில், 3 ஆம் சங்கம் மதுரையில் இருந்தன.

- சங்க இலக்கியங்கள் அறிவுரை கூறும் நூல்கள் (அறநூல்கள்) மரபுக் கதை கூறும் நூல்கள் என இருவகைப்பட்டன. இவை கீழ்க் கணக்கு நூல்கள், மேற் கணக்கு நூல்கள்.

- 1 ஆம் சங்கத்துக்குரிய நூல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை.

- இப்போது கிடைக்கப் பெற்றவற்றில் மிகப் பழைய நூல் 2 ஆம் சங்கத்துக்குரிய தொல்காப்பியம் என்ற இலக்கண நூல்.

- 3 ஆம் சங்கத்துக்குரிய நூல்கள் இரண்டு.
  நூல்கள் 8 அடங்கிய எட்டுத்தொகை, 10 நூல்கள் அடங்கிய பத்துப்பாட்டு

- எட்டுத்தொகை நூல்கள்
  (அகநானூறு, புறநானூறு, நற்றிணை நானூறு, குறுந்தொகை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை)

- பத்துப்பாட்டு
  (திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாடல், பட்டினப்பாட்டு, பட்டியை பாடல், மலைபடுகடாம்)

- 1 ஆம் சங்கத்தின் முக்கிய புலவர்கள் அகத்திய முனிவர், முரஞ்சியூர் முடிநாகராயர்.

- தொல்காப்பியர் வல்லுக்காப்பியர் இரண்டாம் சங்கத்துக்குரிய புலவர்கள்.

- 3 ஆம் சங்கத்துக்கு உரியவர்
  கபிலர், நக்கீரர், பரணர்

Department of Examinations

- சங்க இலக்கியங்களில் வரலாறு மற்றும் இலக்கியப் பெறுமதி உடையது போல அரசியல் ( அரசியல் இயல்பு, அரச சபை, அரசரின் பணிகள், அரசர்களுக்கிடையியேயான யுத்தம் ) பொருளாதாரம் (விவசாயம், கைத்தொழில், வர்த்தகம், வர்த்தகப் பொருட்கள், துறைமுகங்கள்) சமயம் (தெய்வங்கள், வழிபாட்டு முறைகள்) சமூகம் கலாசாரம் (நாளாந்த வாழ்க்கைப் பாரம்பரியம், உணவுபானம்) என்பன பற்றிய முக்கிய தகவல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

- சேர, சோழ, பாண்டிய இராச்சியங்கள் பற்றிய தகவல்கள்

- இம்மூன்று இராச்சியங்களிலும் இருந்த முக்கிய அரசர்களான கரிகாலன் சோழன், சேரன் செங்குட்டுவன், பாண்டியன், நெடுஞ்செழியன் பற்றிய தகவல்களும் காணப்படுதல்.

- புலவர்களுக்கு அரசர்கள் ஆதரவு வழங்கியமை. 500 இற்கு மேற்பட்ட புலவர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. அரசர்களும் புலவர்களாயிருந்தனர். புலவர்களில் பல தொழில் செய்தவர்களும் இருந்தனர். பெண்புலவர்களும் இருந்தனர்.

- இயற்கை சூழலில் முக்கிய கவனம் செலுத்தியமை. மக்கள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட வளமான இலக்கியங்கள்.

**(7 புள்ளிகள்)**

(ii) **கி.மு ஆறாம் நூற்றாண்டில் வட இந்தியாவில் நிலவிய இராச்சியங்கள்**

- இக்காலப் பகுதிக்கான தகவல்கள் பௌத்த, சமண, இந்து சமய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- இதற்கமைய 16 குடியரசுகள் நிலவின. (16 மகாஜன மதங்கள்)

- இங்கு நடைமுறையிலிருந்த நிர்வாக முறை இரண்டு அவையாவன
  1. மன்னராட்சி　　　2. குடியாட்சி

- இவற்றுள் பெரும்பாலானவற்றில் மன்னராட்சி முறை இருந்ததுடன் 4 முக்கியமானவை அவை மகத, வத்ச, கோசல, அவந்தி இவை சதுர்மகா விஜித எனப்பட்டன.

- மன்னராட்சியில் மன்னனே தலைவன்.

- சட்டத்துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை மூன்றின் அதிகாரமும் மன்னனுக்கு உரித்தானவை.

- எனினும் மந்திரி பர்ஷத் சபையினால் மன்னனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்டமை.

- யானை, குதிரை, தேரர், காலாட்படை கொண்ட படையணி காணப்பட்டன.

- மத்சய திருமண தொடர்புகள் மூலம் முக்கிய அரசுகள் நான்கும் ஏனைய நாடுகளை அடிமைப்படுத்த முடிந்தமை.

- இவற்றில் மகதம் ஏனைய இராச்சியங்களைத் தோற்கடித்து முன்னிலைக்கு வருதல். இதற்கு மகதத்தின் புவியியல் காரணிகளும் உதவியமை.

**(7 புள்ளிகள்)**

Department of Examinations

(iii)ஹூணர் படையெடுப்பு

- மத்திய ஆசியாவிலிருந்த மிலேச்ச குடியினராகக் கருதப்படும் ஹூணர் பல சந்தர்ப்பங்களில் இந்தியாவை ஆக்கிரமித்தனர்.

- கி.பி 5 ஆம் நூற்றாண்டின் நடு அரைப்பகுதியில் முதன் முறையாக ஹூணர் காந்தாரத்தை கைப்பற்றி கிழக்குப் பக்கமாக பரந்து சென்றனர்.

- ஸ்கந்த குப்தனால் இந்த ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டது. (ஹிதரி ஆவணம்)

- நரசிங்க குப்த மன்னன் காலத்தில் ஹூண ஆக்கிரமிப்பாளரின் கடும் தாக்குதலுக்குள்ளானதுடன் திறை செலுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஹியுங் – த்சாங்கே அறிக்கை)

- கி.பி 6 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோறமானனின் கீழ், ஹூணர் பஞ்சாபின் ஊடாக இந்தியாவின் உட்பகுதிக்குள் புகுந்தனர்.

- அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் உத்தரப் பிரதேசம், இராஜபுத்தானம், பஞ்சாப், காஷ்மீர் ஆகிய பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- கி.பி 515 இல் தோறமானின் மகன் மிஹிரகுல தனது தலைநகராக சியல் கொட் அல்லது சாகலவை தெரிவு செய்தான்.

- இளவயதினான மன்னன் அரக்கத் தனமாக செயற்பட்டான் என இராஜதரங்கனிய ஹியுங் த்சாஸ்கே அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

- மிஹிரகுல ஏரான் வரை வட இந்தியாவை ஆக்கிரமிப்பு செய்த சந்தர்ப்பத்தில் பானு குப்த மன்னனின் தாக்குதலில் தோல்வி கண்டான்.

- மென்டசோரியின் யசோவர்மன் ஹூணரின் ஆதிக்க விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தியதால் ஹூணரின் ஆதிக்கம் வடமேற்கு இந்தியாவரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

- கன்னியகுமாரியின் மௌரிய வம்ச ஈசானவர்மனின் மகன் சர்வவர்மன் ஹூணருடன் போரிட்டு தோல்வியடையச் செய்து ஹூணரின் படையெடுப்பிலிருந்து வட இந்தியாவைப் பாதுகாத்தான்.

- குப்த பேரரசின் வீழ்ச்சிக்கு ஹூணர் படையெடுப்பு பெரிதும் தாக்கம் செலுத்தியது.

- குப்த பேரரசு வீழ்ச்சிக்கு ஹூணர் படையெடுப்பு பெரிதும் செல்வாக்கு செலுத்தியது.

**(7 புள்ளிகள்)**

Department of Examinations

(iv)**ஹர்ஷவர்த்தன மன்னன்**

- தானேஸ்வர புஷ்யபூதி அரசவம்சத்துக்குரிய இம் மன்னன் அரசியல், பொருளாதாரம், சமயம், கலாசாரம் ஆகிய துறைகளை விருத்தி செய்தவன் ஆவான்.
- இவன் பற்றிய தகவல்கள் வழங்கும் முக்கிய மூலாதாரம் பாணபட்டரின் ஹர்ஷசரிதம் ஆகும்.
- குப்தர் காலத்தின் பின் வட இந்தியாவை ஒன்றுபடுத்திய இந்து மன்னன்.
- ஆதிக்க விரிவாக்கத்தின் போது திக்விஜய இயக்கத்தை பின்பற்றினான்.
- கௌடதேசத்து சசங்கவுக்கு எதிராக படை அனுப்பியமை.
- தனது சகோதரியான ராஜ்ய ஸ்ரீ இளவரசியைத் தேடி விந்தியம் வரை சென்ற பயணத்தில் கடந்து சென்ற அரசுகளின் ஆட்சியாளர்களை தனதாக்குட்பட்ட அரசர்களாக்கி அந்த அரசுகளை அடிமைப் படுத்தியமை.
- வல்லபி, கூர்ஜா ஆட்சியாளருக்கு எதிராகப் போரிட்டான்.
- இந்து பிரதேசத்தைக் கைப்பற்றியமை.
- வங்காளம், அவுத் கொங்கோதா, ஒரிஸ்ஸா உட்பட கிழக்குப் பகுதியை கைப்பற்றியமை.
- கன்னோசியை முத.ன்மையாகக் கொண்டு நிர்வாக நடவடிக்கைகளைக் கொண்டு சென்றமை.
- சகல உத்தராபாதநாதர் என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.
- பௌத்த மதம் மற்றும் ஏனைய மதங்களினதும் வளர்ச்சிக்கு அனுசரணை வழங்கினான்.
- தூபிகள், விகாரைகள் கட்டுவித்தல்.
- சமய மகாநாடுகள், நடத்துதல் (கனோஜ், பிரயாக் மகாநாடுகள்)
- பிரயாகவல மோக்ஷ பர்வத எனும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மகா தானத்தை நிகழ்த்தியமை.
- கற்றவர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஆதரவு வழங்குதல்.
- வருமானத்தில் 1/4 பங்கை எழுத்தாளருக்கு வழங்குதல்.
- நாலாந்த வலபி, தக்சிலா போன்ற கல்வி நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குதல்.
- மன்னனே நூல்கள் எழுதுவதில் ஈடுபடுதல் (ரத்னாவலி, பிரியதர்சிகா, நாகநந்த)
- ஹர்வு சரிதம், காதம்பரி போன்ற நூல்கள் தோன்றியமை. (பாண பட்டர்)

**(7 புள்ளிகள்)**

**(07 × 02 = 14 புள்ளிகள்)**

Department of Examinations